9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1995. (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "1995 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்".

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) —தொடர்ச்சி

(ஆ) நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1995.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

1995 நவம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10-11-1995) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

பின்னர் பேரவை பிற்பகல் 1.34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

56. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 27-6-1995 ஆம் நாளிட்ட 182 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

57. விவேகானந்தா ராக் மெமோரியல் மற்றும் விவேகானந்தா கேந்திரா ஆகியவைகள், சுவாமி விவேகானந்தா, ஸ்ரீராமகிருஷ்ணா மற்றும் திருமதி சாரதாதேவி ஆகியோரின் திருவுருவம் பதித்து வெளியிடும் தினசரி நாட்காட்டி, வாழ்த்து அட்டைகள் மற்றும் நாட்குறிப்பேடு ஆகியவைகளின் விற்பனைக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 19-7-1995 ஆம் நாளிட்ட 228 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

58. வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 6-2-1992 ஆம் நாளிட்ட II(1)/வ.வ.ச.அ./25/92 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்வது குறித்து அத்துறையின் 30-6-1995 ஆம் நாளிட்ட 187 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

59. பார்வையிழப்பைத் தடுத்தல் மற்றும் மறுவாழ்விற்காக இயங்கும், சென்னை, திருவாளர்கள் சத்யஜோதி சங்கத்தினரால் தயாரிக்கப்படும்